1982 மார்ச் 24]

திரு. து. இராசரத்தினம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் மண்ணை நிரப்பிய பின்னர் பட்டா கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரை மண்ணை நிரப்புவதற்கு, 2, 3, அடிகள் உயரும் அளவிற்கு ஏதாவது திட்டங்கள் உண்டா? அப்படியில்லையென்றால, அவர்களுக்கு பட்டா கொடுத்து விட்டால் அவர்கள் மண்ணை நிரப்பி அதன் மூலம் வாழ்க்கை நடத்த அது ஏதுவாக அமையாதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மண்ணை நிரப்புகிற என்ற வார்த்தையையே நான் சொல்லவில்லை. மண்ணை நிரப்புவது என்பது வேறு, தண்ணீர் பிடிக்காமல் வழிவகை செய்வது என்பது வேறு. மண்ணை நிரப்பவே முடியாது அங்கே. அந்த இடத்தைநான் அதிகாரிகளோடு பார்த்து விட்டு வந்திருக்கிறேன். அங்கேமண்ணைப் போட்டு நிரப்பவே முடியாது. தண்ணீர் பிடிக்காமல் அதற்கு போக்கிடம் ஏற்படுத்த முடியுமா என்பதை அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவி பயிற்சியை கட்டாயமாக போதிக்கும் திட்டம்.

*வினா எண் 629—வேடசந்தூர்வி. திரு. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முதல் உதவி பயிற்சியை கட்டாயமாக போதிக்க-அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 4, 5, 7 வகுப்புகளில் அறிவியல் பாடத் திட்டத்தின் கீழ் முதலுதவியைப் பற்றிக் கற்றுத் தரப்படுகிறது. மேலும் மாணவர்களின் உபயோகத்திற்கென முதலுதவிப் பொருள்களும் மருந்துகளும் அடங்கிய முதலுதவிப் பெட்டி வைத்தல், ஒவ்வொரு வகுப்புக்கும் முதலுதவிக்கென முதலுதவிபெட்டி வைத்திருத்தல், முதலுதவி அவ்வப்போது செய்ததைக் குறித்து ஒரு குறிப்புப் புத்தகம் வைத்திருத்தல் ஆகியவற்றில் 7 ஆம் வகுப்பிலேயே பயிற்றுவிக்கப்படுகிறது. எட்டாம் வகுப்பு ஆங்கிலப் பாட நூலிலும் முதலுதவி பற்றிய பாடம் ஒன்று உள்ளது. முதலுதவியைப் பற்றி இவ்வாறு கீழ் வகுப்புகளிலேயே நன்கு தெரிந்து கொள்ள வகை செய்யப்பட்டுள்ளதால் பள்ளிகளில் உயர் வகுப்புகளிலும் கல்லூரிகளிலும் முதல் உதவிப் பயிற்சியைக் கட்டாயமாகப் போதிப்பது தேவையெனக் கருதப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS